தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, மாசி 14, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 பிப்ரவரி 26, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***66186—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சட்டமன்றத்திலே அடிக்கின்ற பந்தில், எதிரிகள் கலங்கிப் போயிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நம்முடைய ஆட்சிதான் தமிழ்நாட்டில் மலரப் போகிறது என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய கனவாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, மாண்புமிகு முதலமைச்சருக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சார்ந்திருக்கிற பெரியசெவலையில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாத காரணத்தின் அடிப்படையில், நிறைவு செய்தவுடன் அதற்கான பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிலே அன்னையாய், அரவணைப்பிலே தாயாக, என்னைப் போன்ற எளியவனையும் ஆளாக்கி அழகு பார்த்து, ஏழை மக்களை வாழவைத்து, இன்றைக்கு இறைவனடி சென்றாலும், தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் தெய்வமாய் வாழ்ந்து வரும் எங்களின் குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையின் சிகரம், சேலத்துச் சிங்கம், குடிமராமத்து நாயகர், விவசாயிகளின் விடிவெள்ளி, பாசமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். ஜல்லிக்கட்டு நாயகர், தென் பாண்டிச் சிங்கம், மாண்புமிகு முதலமைச்சரோடு உற்ற துணையாகச் செயல்படும் மாண்புமிகு துணை முதலமைச்சர்

2021 பிப்ரவரி 26]

அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய மாவட்ட மைந்தர் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சாதாரண குக்கிராமமான எடைக்கல் கிராமத்தில் விவசாயக் குடும்பத்திலே பிறந்த எளியவனான என்னை, கடந்த 2004 ஆம் ஆண்டு எங்கள் இயக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக அறிவித்து, கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்தும், திரும்பவும், 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலே திருநாவலூர் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட வாய்ப்பளித்தும், பொதுமக்களின் பேராதரவைப் பெற்று, வெற்றிபெறச் செய்து, இந்த அவையிலே என்னை அடியெடுத்து வைக்கச் செய்து, மக்கள் பணியாற்ற வைத்தார்கள் நம் அம்மா அவர்கள். அதன் பிறகு, தொகுதி மறுசீரமைப்பின்போது உளுந்தூர்பேட்டை பொதுத் தொகுதியாக உருவாக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எனக்குப் போட்டியிட வாய்ப்பளித்து, இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்து, என்னை மக்கள் பணியாற்ற வைத்தார்கள் மாண்புமிகு இதய தெய்வம் மனித தெய்வம், எனது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மீண்டும் மூன்றாவது முறையாக, 2016 ஆம் ஆண்டிலே உளுந்தூர்பேட்டை தொகுதியிலே என்னைப் போட்டியிட வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாசியோடு, மீண்டும் வெற்றிபெற்று, தொகுதி மக்களுக்குப் பணியாற்றிட வாய்ப்பளித்த என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் இடம் நோக்கி வணங்கி, என்னுடைய நன்றியை அவர்களின் மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எளியவனான என்னை திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினராகத் தேர்வு செய்துள்ளார்கள். தமிழ்நாட்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினராக இதுவரையிலும் தேர்வு செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக எளியவனான என்னை திருமலை திருப்பதி

தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினராக நியமனம் செய்த காரணத்தினால், தமிழ்நாட்டின் மையப் பகுதியாக இருக்கிற உளுந்தூர்பேட்டையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் ஏழுமலையான் கோயிலைக் கட்ட வேண்டுமென்று நான் முதலமைச்சரிடத்தில் கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் மாண்புமிகு ஜெகன் மோகன் ரெட்டி அவர்களுக்கும், திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்களுக்கும் கடிதங்களை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உளுந்தூர்பேட்டையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் ஏழுமலையான் கோயில் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற 22–2–2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால், திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழுத் தலைவர் சுப்பா ரெட்டி அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் முன்னிலையிலும் அங்கே பூமி பூஜை நடைபெற்றது. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களை உள்ளடக்கிய அந்தப் பகுதியிலே திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் ஏழுமலையான் கோயிலைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகத்தின் சார்பாகவும், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய மனமார்ந்த நன்றியினை அவருடைய பாதந்தொட்டு வணங்கி, என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், திருநாவலூர் ஒன்றியத்திலே பெரியசெவலையில் அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 259 மாணவர்கள் படிக்கின்றார்கள். பத்தாம் வகுப்பில் கிட்டத்தட்ட 60 முதல் 70 மாணவர்கள் படிக்கின்றார்கள். கடந்த வருடம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், நபார்டு திட்டத்தின் மூலமாக 2½ கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கி,

2021 பிப்ரவரி 26]

கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் பெரியசெவலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக இந்த வருடத்தில் தரமுயர்த்திக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பள்ளியைத் தரமுயர்த்துவதற்கு பொதுமக்களின் பங்குத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாயும், 3 ஏக்கர் நிலமும் வழங்கப்பட வேண்டும். ஆனால், 2 ஏக்கர் 49 சென்ட் நிலம்தான் அங்கே இருக்கிறது. அங்கே 100 மாணவர்கள் தேவை; 51 மாணவர்கள்தான் இருக்கின்றார்கள். மேற்சொன்ன நிபந்தனைகள் அனைத்தையும் நிறைவு செய்கிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் சொல்வது உண்மை. அங்கே 2 ஏக்கர் 49 சென்ட் இடம்தான் இருக்கிறது. அதன் அருகில் இடம் பார்த்திருக்கிறோம். அரசு அனுமதி கொடுத்தால் உடனடியாக அந்த இடத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். பொதுமக்களுடைய பங்களிப்புப் பணமும் தயாராக இருக்கிறது. இப்பொழுது அந்தப் பள்ளியில் 51 மாணவர்கள்தான் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். பெரியசெவலை மையப் பகுதியாக இருப்பதால், அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு ஆணையிடப்பட்டால், அதிகமான மாணவர்களை, கிட்டத்தட்ட 150 மாணவர்களை சேர்ப்பதற்கு வழிவகை இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திலே என் சொந்த ஊராக இருக்கின்ற எடைக்கல் கிராமத்திலிருந்தும், ஏசாப்பள்ளி கிராமத்திலிருந்தும் பாலி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் சேர்ந்து படிக்கின்றார்கள். பாலி அரசு உயர்நிலைப் பள்ளியிலும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நபார்டு திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக வகுப்பறை கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் நிலையில் இருக்கின்றன. அந்த உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியினை மக்களிடத்திலேயிருந்து பெறத் தேவையில்லை. ஏனென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பிரசித்திபெற்ற 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினராக இருக்கிறார். அதனால், இரண்டு இலட்சம் ரூபாய் என்பது அவருக்குப் பெரிதல்ல. அந்தத் தொகையை அவரே கட்டி, அந்தப் பணியை முடித்துவிடுவார்; அவர் பணம் கட்டி முடித்தபிறகு, மற்றவை குறித்து இந்த அரசு மிக விரைவிலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், ஏழைப் பங்காளன், எங்கள் தங்கம், எங்க வீட்டுப் பிள்ளை என்று நாம் போற்றி வணங்குகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், தமிழ்நாட்டின் உரிமைகளையெல்லாம் மீட்டெடுத்த தங்கத் தலைவி, தங்கத் தாரகை, பெண்களுடைய பெருமையை உலக அளவில் நிலைநிறுத்திய அற்புதத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

2021 பிப்ரவரி 26]

குடிமராமத்து நாயகன், விவசாயிகளின் தோழன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பாண்டிய நாட்டுப் பண்பாளர், ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்பம் சட்டமன்றத் தொகுதியில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கும் மேலான மக்கள் கோரிக்கையான தொட்டம்மாள் அணைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். இத்திட்டத்தினால் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று குறிப்பிட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை சட்டமன்றத்தில் பலமுறை நாங்கள் தெரிவித்ததையடுத்தும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரிடத்தில் எடுத்துச் சொன்னதையடுத்தும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய முழு முயற்சியின் காரணமாக இன்று அந்தத் திட்டம் துவங்க அரசாணை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கம்பம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் என்னுடைய கம்பம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சீப்பாலக்கோட்டையில், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும் என்று ஏற்கெனவே நான் கோரிக்கை வைத்திருந்தேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கம்பம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள முத்துலாபுரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருந்தேன். அதை ஏற்று, இந்த ஆண்டே அந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

[2021 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விமானம் பறக்க வேண்டுமென்றால் இரண்டு பைலட்கள் தேவை; அதேபோல, மக்கள் பயணங்களை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்றால் இரண்டு தலைமை தேவை என்ற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் ஒருங்கிணைந்து தமிழகத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற இந்த வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டமாக இருக்கின்ற அந்தப் பகுதியில் உறுதியாக அந்தப் பணிகளை இந்த அரசு நிறைவேற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை 99.90 சதவிகிதமாக உயர்த்துகின்ற அளவுக்கும், அதே நேரத்தில் இடைநிற்றலைக் குறைப்பதற்கும், புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டும், ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன. தங்களுடைய ஆட்சிக் காலத்திலே அதிகமான பள்ளிகளைத் தரமுயர்த்தி, அரசு பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை அளித்ததன் காரணமாக, கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களும் மருத்துவக் கல்வி படிப்பதற்கு வசதி ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், கொங்கு நாட்டுத் தங்கம், எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன்.

2021 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரணம்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மேல்நிலைக் கல்வி படிப்பதற்கு சூலூர் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே, அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக அரசுக்கு செலுத்த வேண்டிய 2 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டு, உரிய முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு என்னுடைய தொகுதியிலே ஓர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தந்தார்கள். அதேபோல, மங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தந்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, காரணம்பேட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை கூடுதலாக இருக்கிறது என்பதை அரசு அறியும்; தேவையான நிலங்களும் இருக்கின்றன. அதற்கான நிதியை அவர்கள் உடனடியாக வழங்காமல் இருக்கிறார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியவுடன், அதை அரசு பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும்.*

ஏனென்று சொன்னால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2012 முதல் இதுவரையிலும் புதிதாக 263 தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன; 127 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,115 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 644 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன. இன்னும் மக்களுடைய தேவைகளை மனதிலே கொண்டு, மாணவர்களுடைய சேர்க்கைக்கேற்ப, மாணவர்களுடைய நலன் கருதி, இந்த அரசு

அனைத்துக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற 8 கோடி தமிழ் மக்களுடைய நலனுக்காக ஓடி, ஓடி உழைத்து, உறங்க மறந்து, இன்று வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம், தர்ம தேவதை, அம்மாவினுடைய பொன்னடிகளை வணங்குகிறேன். அம்மாவினுடைய நல்லாசியோடு, தமிழகத்தினுடைய நலனுக்காக அம்மாவைப் போல ஓடி, ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்ற அற்புதத் தலைவர், எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வாரிசாக, இன்று கழகப் பணியையும், ஆட்சிப் பணியையும் செவ்வனே நடத்திக் கொண்டிருக்கின்ற மாட்சிமை பொருந்திய, மாண்பமை நிறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாக, தமிழகத்தினுடைய துணை முதலமைச்சராகவும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளராகவும் செவ்வனே பணியாற்றி வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10—15

நான் சார்ந்திருக்கின்ற செய்யாறு தொகுதி, செய்யாறு ஒன்றியம், தளரப்பாடி ஊராட்சி, பூம்பூம் மாட்டுக்காரர்கள் வசிக்கும் பகுதி. நான் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நடந்து வரும்போது, அந்தப் பகுதிக்கு ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று ஒரு கோரிக்கை மனுவை அளித்தேன். அந்தக் கோரிக்கை அன்றே பரிசீலிக்கப்பட்டு, அன்று மாலையே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, என்னுடைய பாசத்திற்குரிய, நெஞ்சம் நிறைந்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அந்தப் பள்ளியைத் திறந்து வைத்து ஓராண்டு நிறைவு பெற்றுவிட்டது. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. பூம்பூம் மாட்டுக்காரர்கள் என்று சொன்னாலே, அவர்கள் தெருத் தெருவாகச் சென்று தங்களுடைய வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக்

2021 பிப்ரவரி 26]

கொள்கின்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய நலன் கருதி, இன்று மாலைக்குள், பூம்பூம் மாட்டுக்காரர் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு, என்னுடைய பாசத்திற்குரிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுதே அறிவிப்பாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூம்பூம் மாட்டுக்காரன் தெருவில் வந்தாண்டி" என்று சொல்வதுமாதிரி, ஒரேயடியாக இன்றே, இப்பொழுதே அறிவிக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இதற்கு அரசு சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. உங்கள் கோரிக்கை, நியாயமான கோரிக்கை. அதுவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், கல்வியிலே உயர வேண்டிய அந்த மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனி கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

துணை மின் நிலையம்

***41779—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, சணமங்கலம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?